மாலை பதிப்பு

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com

03.09.2022 சனிக்கிழமை

supeedsam.com supeedsam@gmail.com


## முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பினார்



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச மீண்டும் நாடு திரும்பிய சந்தர்ப்பத்தின் புகைப்படங்கள் ஊடகங்களுக்கு வெளியிடப்பட்டுள்ளன. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று (02) இரவு நாடு திரும்பினார். முன்னாள் ஜனாதிபதி நேற்று இரவு 11.45 மணியளவில் சிங்கப்பூர் எயார்லைன்ஸ் விமானம் மூலம் 02

## 20 இராஜாங்க அமைச்சுக்களை நியமிக்க ஜனாதிபதி தீர்மானம்

பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளின் இணக்கப்பாட்டுடன் சர்வக்கட்சி அரசாங்கத்தை ஸ்தாபிப்பது இழுபறி ஏற்பட்டுள்ள நிலையில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்களை உள்ளடக்கிய வகையில் 20 இராஜாங்க அமைச்சுக்களை நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளதாக ஆளும் தரப்பின் உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டார். 20 இராஜாங்க அமைச்சுக்களுக்கான நியமனம் நாளை அல்லது எதிர்வரும் வாரமளவில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. சகல அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து சர்வக்கட்சி அரசாங்கத்தை ஸ்தாபிப்பது சாத்தியமற்றதாயின் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையில் நிலையான அமைச்சரவையை எதிர்வரும் வாரத்திற்குள் நியமிக்குமாறு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளனர்.

## தொலைபேசி, தொலைக்காட்சி சேவைக் கட்டணங்கள் அதிகரிப்பு

கையடக்க தொலைபேசி, நிலையான தொலைபேசி, இணையம், தொலைக்காட்சி ஆகியவற்றுக்கான சேவைக் கட்டணங்கள் அனைத்தையும் அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. குறித்த சேவைக் கட்டண திருத்தங்கள் செப்டம்பர் 5 முதல் அமலுக்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய கையடக்க தொலைபேசி, நிலையான தொலைபேசி, இணைய சேவைக் கட்டணங்கள்; **20%** அதிகரிக்கப்படும். மேலும் அனைத்து தொலைக்காட்சி சேவைகளுக்கான கட்டணங்கள் 25ூ அதிகரிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பாராளுமன்ற செங்கோலுக்கு இல்லாத மரியாதை சீனாவின் உளவுக் கப்பலுக்கு வழங்கப்படுவதுதான் இந்த நாட்டின் ஜனநாயகம்

### பாராளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம் ஜனா

**(சுமன்)**



இந்தக் காலகட்டத்தில் இந்தியா உணவுக்கப்பலை அனுப்புகிறது. ஆனால், தங்களால் வழங்கப்பட்ட கடனைக் கூட மறுசீரமைப்புச் செய்யமுடியாது என்று சொல்கின்ற சீனா இங்கு உளவுக் கப்பலை அனுப்புகின்றது. அதைவிட வேதனையான விடயம் பாராளுமன்றத்தில் செங்கோல் வரும் போது எழுந்து மரியாதை கொடுக்காத தேரர் சீனக்கப்பல் வரும் போது மரியாதை கொடுத்து எழுந்து நிற்பது தான் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமாக கோவிந்தன் கருணாகரம் ஜனா தெரிவித்தார். விவசாயக் கடன் தள்ளுபடி என்பது மட்டக்களப்பு, அம்பாறை விவசாயிகளுக்கு இல்லாமல் உள்ளது. 02

## இலங்கைக்கு தொடர்ந்து ஆதரவளிக்கும் சீனா

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு இலங்கைக்கு தொடர்ந்து ஆதரவளிப்பதாக சீனா தெரிவித்துள்ளது. இலங்கையின் தற்போதைய சிரமங்களை சமாளிக்கவும், கடன் சுமையை குறைக்கவும், நிலையான வளர்ச்சியை அடையவும் இலங்கைக்கு தொடர்ந்து ஆதரவை வழங்குவதாக சீனா தெரிவித்துள்ளது. சீன வெளியுறவு அமைச்சகம் இதனை அறிவித்துள்ளது. இலங்கைக்கு சாதகமாக உதவுவதற்கு சம்பந்தப்பட்ட நாடுகள் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்ற தயாராக இருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## வடக்கு கிழக்கு பகுதியிலுள்ள சிறுபான்மை கட்சிகள் ஒன்று சேர்ந்து செயல்படாவிடில் உரிமைகளை வென்றெடுக்க முடியாது

### பணிப்பாளர் யட்சன் பிகிராடோ

**(வாஸ் கூஞ்ஞ)**



வடக்கு கிழக்கிலுள்ள அனைத்து சிறுபான்மை கட்சிகள் ஒரே குடையின் கீழ் நின்று எமது உரிமைகளுக்காக குரல் கொடுத்தால் மட்டுமே நாம் எமது உரிமைகளை வென்றெடுக்க முடியும். இதற்கு தமிழ் முஸ்லீம் மக்கள் ஒன்றினைந்து செயல்பட வேண்டும் என 'மெசிடோ' நிறுவனத்தின் மன்னார் மாவட்ட பணிப்பாளர் யட்சன் பிகிராடோ இவ்வாறு தெரிவித்தார். கெரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல் என்ற தொனிப்பொருளில் வடக்கு கிழக்கு பகுதிகளில் எட்டு மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்பட்டு வரும் 02

## மக்களாணையை மீண்டும் பெற்று ஸ்திரமான ஆட்சிக்கு வழிகோலுங்கள்

### பாராளுமன்ற உறுப்பினருமான றிஷாட் பதியுதீன்



வங்குரோத்து அடைந்துள்ள இந்த நாட்டை கட்டியெழுப்புவதற்கு இடைக்கால வரவு – செலவுத் திட்டம் எந்தளவில் ஈடுகொடுக்கும் என்பது கேள்விக்குறியாக உள்ளதாக மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான றிஷாட் பதியுதீன் தெரிவித்தார். பாராளுமன்றில் நேற்றைய தினம் (02) உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது, "நான்கு மாத காலத்துக்கான ஒரு இடைக்கால வரவு – செலவுத் திட்டத்தை நிதி அமைச்சரான ஜனாதிபதி சமர்ப்பித்திருக்கின்றார். நீண்ட நாட்களாக வங்குரோத்து நிலையில் 02

## பாணின் விலை 300 ரூபா

கோதுமை மாவின் விலை அதிகரித்ததால் பாணின் விலை 300 ரூபாவாக அதிகரிக்கும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவிக்கின்றது. நாடளாவிய ரீதியில் கோதுமை மாவுக்கான தட்டுப்பாடு காரணமாக சந்தையில் கோதுமை மாவின் விலை வேகமாக அதிகரித்துள்ளது. மேலும் ஒரு கிலோ கோதுமை மாவின் மொத்த விலை 350 முதல் 400 ரூபா வரையிலும், சில்லறை விலை 360 முதல் 380 ரூபா வரையிலும் உள்ளதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். இதனால் கோதுமை மாவின் தட்டுப்பாடு மற்றும் விலை அதிகரிப்பு பேக்கரி தொழிலை கடுமையாக பாதித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தொடர்ந்து அதிகரித்து வரும் கோதுமை மாவின் விலையை கட்டுப்படுத்த அரசாங்கம் தலையிட வேண்டுமென பேக்கரிகள் சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன. இதேவேளை, கோதுமை மாவின் தட்டுப்பாடு தொடர்பில் ப்ரீமா மற்றும் செரண்டிப் நிறுவனங்களுடன் 02

## மார்ச் மாதத்திற்குள் உள்ளூராட்சி தேர்தல்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எதிர்வரும் மார்ச் மாதத்திற்குள் நடாத்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். உள்ளூராட்சி மன்றத் தேர்தல் 2018 ஆம் ஆண்டில் இடம்பெற்றது. அதன் காலம் 2022 ஆம் ஆண்டு முடிவடைய இருந்தது. அமைச்சருக்கு உள்ள அதிகாரத்தடதிற்கமைய அதன் காலம் 2023 ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டது. தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரத்தின் கீழ் உள்ளூராட்சி மன்றங்களுக்கு செப்டம்பர் 20ஆம் திகதிக்கு பின்னர் தேர்தலை நடத்த முடியும் என்று சட்டத்தரணி புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதி வாக்காளர் பட்டியல்கள் சான்றளிக்கப்படவுள்ளதால், உள்ளூராட்சித் தேர்தலை பின்னர் நடத்துவது குறித்து தீர்மானிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். கடந்த முறை உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்காக 5 பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இம்முறை அந்த தொகை எட்டு முதல் பத்து மில்லியன் வரை இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## இலங்கை பிரஜைகள் மீது பாரிய கடன்

நாட்டில் நிலவும் பணவீக்கம் காரணமாக, இந்த ஆண்டு மே மாதமளவில் நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பமும் 58 இலட்சம் ரூபாய் கடனாளியாக மாறியுள்ளதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளிவிவரவியல் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்தார். பல்கலைக்கழகத்தின் குறித்த பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட விசேட ஆய்வில் இவ்விடயம் கண்டறியப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். அதற்கமைய நாட்டில் உள்ள ஒவ்வொரு பிரஜையும் 15 இலட்சத்து 56 ஆயிரம் ரூபாய் கடனாளியாக காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்

## உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றில் கிழக்கு மாகாணம் முதலிடம்

2021 ஆம் ஆண்டின் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் பகுப்பாய்வில் பாடசாலைப் பரீட்சார்த்திகளின் பெறுபேற்றின் அடிப்படையில் கிழக்கு மாகாணம் முதலிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளதாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி.நகுலேஸ்வரி– புள்ளநாயகம் அவர்கள் தெரிவித்துள்ளார். மேலும் இச் சாதனைப் பெறுவதற்காக ஆலோசனைகளை வழங்கிய கிழக்குமாகாண ஆளுநர் , பிரதம செயலாளர் மற்றும் கிழக்கு மாகாணக் கல்விச் செயலாளர் அவர்களுக்குத் தனது நன்றியினைத் தெரிவித்துள்ளார். இதே போன்று கிழக்கு மாகாணத்திலுள்ள வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், வளவாளர்கள் 02

## முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பினார்

வந்தடைந்தார். நாட்டில் ஏற்பட்ட பொதுமக்களின் எதிர்ப்பை அடுத்து, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச கடந்த ஜூலை 14ஆம் திகதி விமானப்படை விமானம் மூலம் மாலைதீவுக்குச் சென்றார். பின்னர், மாலைதீவில் இருந்து சிங்கப்பூர் சென்ற முன்னாள் ஜனாதிபதியும் அவரது மனைவியும் ஒகஸ்ட் 11ம் திகதி வரை அந்நாட்டில் தங்கியிருந்தனர். அதனையடுத்து முன்னாள் ஜனாதிபதி கடந்த 11ஆம் திகதி தாய்லாந்து சென்றார். கோட்டாபய ராஜபக்ச ஒரு மாதம் 19 நாட்களுக்குப் பிறகு நேற்று இரவு நாடு திரும்பினார். அங்கு முன்னாள் ஜனாதிபதியை வரவேற்க அமைச்சர்கள் பலரும் விமான நிலையத்திற்கு வந்திருந்தனர். முன்னாள் ஜனாதிபதியின் வருகையை முன்னிட்டு விமான நிலையத்தை சுற்றி பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்ததாக தெரண விமான நிலைய செய்தியாளர்கள் தெரிவித்தனர். பின்னர், இலங்கை வந்த முன்னாள் ஜனாதிபதி, கொழும்பு 7, மலலசேகர மாவத்தையில் உள்ள அரச உத்தியோகபூர்வ இல்லத்திற்குச் சென்றார். இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அமைச்சர்கள் பலரும் இன்று (03) குறித்த வீட்டிற்கு சென்றிருந்தனர்.

## பாராளுமன்ற செங்கோலுக்கு இல்லாத மரியாதை சீனாவின் உளவுக் கப்பலுக்கு வழங்கப்படுவதுதான் இந்த நாட்டின்

ஏனெனில் அம்மாவட்ட விவசாயிகள் குறிப்பிட்ட காலத்துக்கு முன்னரே இடைப்போக வேளாண்மையை முடித்து தற்போது பெரும்போகத்திற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதால் அவர்கள் பெற்ற கடன்களை அடைத்துவிட்டார்கள். அவர்களுக்கு இந்தக் கடன் தள்ளுபடியானது இல்லை. இததனை விவசாய அமைச்சர் கருத்திற் கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இன்றைய பாராளுமன்ற அமர்வில் பாதீட்டு விவாதத்தின் போது உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உண்மையில் இந்த நான்கு மாதங்களுக்கான இடைக்கால வரவு செலவுத்திட்டம் விவாதித்துக் கொண்டிருக்கையில் சர்வதேச நாணய நிதியம் ஊழியர் மட்டத்தில் 2.9 பில்லியன் டொலர்களை இலங்கைக்குக் கடனாக வழங்க முன்வந்திருப்பதையிட்டு ஓரளவுக்கு இந்த நாடு மூச்சு விடக்கூடிய நிலைமைக்கு வரும் என்பது எல்லோருடையதும் எதிர்பார்ப்பு. அதே வேளையில் அவர்கள் சில நிபந்தனைகளைக் கூட வைத்திருக்கிறார்கள். வரியைச் சரியாக பேணிப்பாதுகாப்பது, மக்களின் அடிப்படை வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான வேலைத்திட்டம், ஊழல் அதுதான் இந்த நாட்டில் மலிந்து கிடப்பதும் இந்தப் பொருளாதார நெருக்கடிக்குக் காரணமானதும், அதைவிட மேலாக இலங்கைக்குக் கடந்த காலங்களில் கடன் கொடுத்த நாடுகளிடம் கடன் மறுசீரமைப்பு தொடர்பாக ஒரு உடன்பாட்டுக்கு வரவேண்டும். நேற்றைக்கு முதல் நாள் மத்திய வங்கியின் ஆளுனர் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நாட்டின் தற்போதைய பொருளாதார நிலவரம் தொடர்பாக விளக்கமளித்திருந்தார். அவர் குறிப்பிடும் போது இந்த நாடு சுதந்திரமடைந்த காலமிருந்து தன்னிறைவடையவில்லை. கடன்கள் ஒவ்வொரு ஆண்டும் கடன்களைப் பெற்றிருப்பதாகச் சொன்னார். அதே வேளையில் 80 ஆண்டுகளில் பெற்ற கடன்களில் இந்த நாட்டை முன்னேற்றுவதாகக் கூறயிருந்தார்.

மகாவலி அபிவிருத்திக்கும் நீர் மூலமான மின்சார உற்பத்திக்குமாக கடன்களை அந்தக் கடன்கள் பெற்றிருந்ததாகக் கூறியிருந்தார். ஆனால் மகாவலி அபிவிருத்தி ஊடாக அரிசியில் தன்னிறைவடைந்திருந்தாலும் மகாவலி அபிவிருத்தி என்பது வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் இனப்பரம்பலைக் குறைப்பதற்கான குடியேற்றங்களை மையப்படுத்தியே அன்றிலிருந்து இன்றுவரை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நீர் மூலமாக 60 வீதம் மின்சாரத்தைப் பெற்றுக் கொடுத்திருந்தாலும் ஏனைய தற்போதைய ஊழலின் மத்தியில் டீசலில் இயக்கம் ஜெனரேற்றர்கள் மூலமாகவும், நிலக்கரியில் இயங்கும் அனல் மின் நிலையங்களிலும் ஊழல்கள் இருப்பதாகக் கூறியிருந்தார். ஆனால், 2012ஆம் ஆண்டுக்குப் பிறகு எந்தவித வருமானத்தையும் ஈட்டாத முதலீடுகளுக்காக கடன்களைப் பெற்று அதன் மூலமாக மில்லியன் கணக்கான டொலர்களை தரகுப் பணமாகப் பெற்றிருக்கின்றார்கள் என்பதனையும் அவர் மறைமுகமாகக் கூறியிருந்தார்.

உதவிக்கப்பலை அனுப்புகிறது. ஆனால், தங்களால் வழங்கப்பட்ட கடனைக் கூட மறுசீரமைப்புச் செய்யமுடியாது என்று சொல்கின்ற சீனா இங்கு உளவுக் கப்பலை அனுப்புகின்றது. ஒரு விடயத்தை மிகவும் வேதனையுடன் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். இந்தப் பாராளுமன்றத்தில் செங்கோல் வரும் போது எழுந்து நிற்க முடியாத தேரர் சீனக்கப்பல் வரும் போது அதற்கு மரியாதை கொடுத்து எழுந்து நிற்கிறார். இதுதான் இந்த நாட்டின் ஜனநாயகமா என்று கேட்கின்றேன் என்று தெரிவித்தார்.

## வடக்கு கிழக்கு பகுதியிலுள்ள சிறுபான்மை கட்சிகள் ஒன்று

கவனயீர்ப்பு போராட்டத்தின் 33 வது தினம் வெள்ளிக்கிழமை (02.09.2022) காலை மன்னார் சிலாவத்துறையில் இடம்பெற்றது. தமிழ் முஸ்லீம் மக்கள் கலந்து கொண்ட இது தொடர்பான கவனயீர்ப்பு போராட்டத்தின்போது'மெசிடோ' நிறுவனத்தின் மன்னார் மாவட்ட பணிப்பாளர் யட்சன் பிகிராடோ கலந்து கொண்டு தொடர்ந்து உரையாற்றும்போது அப்பொழுதுதான் அது நிரந்தர பெறுமதியான உறுதியான தீர்வாக அமையும்.. ஆகவேதான் தமிழ் முஸ்லீம் மக்கள் ஒன்றினைந்து இவ்விடயத்தில் செயல்பட வேண்டும் என 'மெசிடோ' நிறுவனத்தின் மன்னார் மாவட்ட பணிப்பாளர் யட்சன் பிகிராடோ இவ்வாறு தெரிவித்தார்.

## உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றில் கிழக்கு மாகாணம் முதலிடம்

போன்றோர். தன்னுடன் இணைந்து இச் சாதனையைப் பெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்கியமைக்காகவும், அவர்களின் வழிநடத்தலில் அதிபர்கள், ஆசிரியர்கள் முன்னின்று உழைத்தமைக்காகவும் தனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துள்ளார். மாணவர்கள் தங்களது விடாமுயற்சியும் பெற்றோர்களின் ஊக்குவிப்பும் கிழக்கு மாகாணம் முதலிடத்தைப் பெறுவதற்கு காலாக அமைந்தது. இந்த வகையில் மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதுடன் பின்தங்கிய பிரதேசங்களில் மாணவர்களின் அடைவு மட்டங்களை அதிகரிக்க தங்களால் இயன்ற பங்களிப்பினைச் செய்த அரச நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் நன்றினைத் தெரிவித்துள்ளார்.

## மக்களாணையை மீண்டும் பெற்று

இருக்கின்ற நாட்டை கட்டியெழுப்புகின்ற வரவு – செலவுத் திட்டமாக இது இல்லாத போதும், தற்காலிகமான இந்த வரவு – செலவுத் திட்டத்தில் ஒரு சில நல்ல விடயங்களை சுட்டிக்காட்டியிருக்கின்றார். எனினும், அதனை நடைமுறைப்படுத்த முடியுமா? என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. அந்த வகையில், செலவீனம் 4,427 பில்லியன் ரூபாவாகவும், வருமானம் 2094 பில்லியன் ரூபாவாகவும் காட்டப்பட்டுள்ளது. இதனை எவ்வாறு நிவர்த்தி செய்யப் போகின்றார்கள் என்பது தெரியவில்லை. வறுமையினாலும் துன்பத்தினாலும் கஷ்டப்படும் மக்கள் தொடர்பில் கூறப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்தினால் மகிழ்ச்சியடைவோம்.

எனினும், நாட்டு மக்கள் மிகவும் மோசமான பஞ்சத்தின் விளிம்பில் வாழ்கின்றனர். ஒருவேளை உணவுக்காக தவிக்கின்ற மிகவும் பரிதாபமான நிலை ஏற்பட்டுள்ளது. ஒரு தாயும் இரு பிள்ளைகளும் வறுமையினால் உயிரை மாய்த்துக்கொள்ள முயன்றதாகவும், அந்த முயற்சி கைகூடாத நிலையில், அவர்கள் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு உயிர் பிழைத்துள்ளதாகவும், நேற்று அரச அதிகாரி ஒருவர் என்னிடம் தெரிவித்தார். இதேபோன்று, எத்தனையோ குடும்பங்கள் அன்றாட வாழ்வுக்காக, உணவுக்காக போராடி வருகின்றனர். பட்டினியால் வாடும் இந்த மக்கள் எந்தக் குற்றமும் செய்யாதவர்கள். ஆட்சியாளர்களே இதற்குப் பொறுப்புக்கூற வேண்டும். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவின் ஆட்சியிலே, அவர்கள் இனவாதத்தை விதைத்து அதனூடாக கலவரங்களையும் வன்முறைகளையும் குழப்பங்களையும் தோற்றுவித்து, சமூக நல்லிணக்கத்தையும் இன சௌஜன்யத்தையும் சாகடித்தனர். ஆட்சிக் கதிரையில் தொடர்ந்திருக்க வேண்டும் என்பதற்காகவே இவற்றைச் செய்தனர். விவசாயிகளின் வயிற்றில் அடித்தனர். இதனால் விவசாயிகள் வீதிக்கு வந்து போராட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. தொழிற்சாலைகள் மூடப்பட்டன.

குறிப்பாக, நான் பிரதிநிதித்துவப்படுத்தும் வன்னி மாவட்டத்தில், தற்பொழுது தலைதூக்கியிருக்கும் மீனவர் பிரச்சினை தொடர்பில், இந்த சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அதாவது மீனவத் தொழிலுக்கும் விவசாயத் தொழிலுக்கும் தேவையான எரிபொருள் இன்மை பிரச்சினையால் அவர்கள் தொடர்ந்தும் என்னிடம் முறையிடுகின்றனர். விவசாயத் தொழிலை மேற்கொள்வதற்கான ட்ரெக்டர்களுக்கு தேவையான எரிபொருள் இன்மையால், அவர்கள் தினந்தோறும் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அலைமோதுகின்றனர்.

அதேபோன்று, நாட்டின் எதிர்கால சிற்பிகளான மாணவர்கள் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளமை யுனிசெப் (ருஜேஊநுகு) அறிக்கையில் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. பாடசாலைகள் இரண்டு வருடங்களுக்கு மேலாக மூடப்பட்டுள்ளதனால், மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாரியளவில் பாதிக்கப்பட்டிருகின்றது. பொருட்களின் விலைவாசி பன்மடங்கு உயர்ந்துள்ளது. நாங்கள் ஆட்சியை பொறுப்புக்கொடுத்த போது இருந்த விலையிலும் 300, 400 மடங்கு விலையதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. சாதாரண குடும்பத்தவர் ஒருவர் அத்தியாவசிய பொருட்களைக் கூட நியாயமான விலைக்கு வாங்க முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. விலைக் கட்டுப்பாடுகள் இன்றில்லை. வியாபாரிகள்தான் விலைகளை தீர்மானிக்கின்ற ஒரு மோசமான சூழல் இன்று உருவாகியுள்ளது. எனவே, பொதுவான திட்டமிடல் பொறிமுறை மூலம் மக்களின் வாழ்க்கைச் செலவை குறைக்க முயற்சியுங்கள். பொருட்களின் விலையை குறைக்க வழி செய்யுங்கள்.

டொலர் தட்டுப்பாடு காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. பல இஸ்லாமிய அமைப்புக்களை தடை செய்து, அவைகளுக்கு மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து இனாமாக வழங்கப்பட்ட எத்தனையோ கொடுப்பனவுகள், திட்டங்கள் இன்று தடை செய்யப்பட்டிருக்கின்றன. தற்பொழுது சிலர் ஜனாதிபதியிடம் அமைச்சுப் பதவிகளைக் கேட்டுள்ளதாக நாங்கள் அறிகின்றோம். அவ்வாறன செயற்பாடுகளை தவிர்த்துக்கொள்ளுங்கள். அவசரமாக பாராளுமன்ற தேர்தலுக்கு சென்று, மக்கள் விரும்புகின்றவர்களை மீண்டும் பாராளுமன்றம் அனுப்புவதன் ஊடாக மட்டுமே, ஸ்திரத்தன்மையான ஒரு பொருளாதாரத்தை, மக்கள் விரும்பும் ஆட்சியைக் கொண்டு வர முடியும். அதற்கு ஆவன செய்யுமாறு ஜனாதிபதியிடம் வேண்டிக்கொள்கின்றேன்" என்று கூறினார்.

## பாணின் விலை 300 ரூபா

அமைச்சர் நளீன் பெர்னாண்டோ நேற்று கலந்துரையாடியுள்ளார். இந்த கலந்துரையாடல் தொடர்பில் அமைச்சர் நளீன் பெர்னாண்டோவிடம் அத தெரண வினவிய போது, ப்ரீமா மற்றும் செரண்டிப் நிறுவனங்களிடம் தற்போது கைவசம் உள்ள கோதுமை மாவினை சந்தைக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய
வருடாந்த மகோற்சவம் - 2022



கல் நந்தி புல்லுண்டு
வெள்ளையரை துரத்தியடித்த
தான்தோன்றீஸ்வரர் மகிமை காண வாரீர்!
கொடியேற்றம் : 29.08.2022 தேரோட்டம் : 11.09.2022
விளம்பர அனுசரணையாளர் மு.அருட்செல்வம் (மகிழடித்தீவு)

# தாய்ப்பாலூட்டும் தாய்மார்களுக்கு நிவாரணம்

**க.ருத்திரன்**

வறிய கற்பினி தாய்மார்களுக்கும் மற்றும் தாய்ப்பாலூட்டும் தாய்மார்களுக்கு நிவாரணம் வழங்கும் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் போசனை பொருட்கள் அடங்கிய பொதிகள் வழங்கும் நிகழ்வு இன்று (2) மடடக்களப்பு வந்தாறுமுலை கிராமோதைய சுகாதார சேவைகள் நிலையத்தில் நடைபெற்றது. குறித்த திட்டத்தினை சர்வதேச அரச சார்பற்ற நிறுவனமான சமறிட்டன் பேஸ் நிறுவனமும் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரும் இணைந்து மாவட்டம் தோறும் நடைமுறைப்படுத்தும் நடவடிக்கை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. பத்தாயிரம் ரூபா (10000ரூபா) பெறுமதியிலான மூவாயிரம் (3000) போசனை பொதிகளே இவ்வாறு வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதன் முதற்கட்டமாக செங்கலடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள வந்தாறுமூலை, சித்தாண்டி, மாவடிவெம்பு, களுவன்கேணி, பலாச்சோலை ஆகிய கிராமங்களில் உள்ள கற்பினி தாய்மாருக்கு வழங்கப்பட்டது. செங்கலடி சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஈ.சிறிநாத் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் ஏறாவூர்பற்று பிரதேச செயலாளர் கே.தனபாலசுந்தரம்,உதவிப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் என்.மயூரன்,செங்கலடி மேலதிக வைத்திய அதிகாரி ஏ,எவ்,ஹஸ்மத் மற்றும் சமறிட்டன் பேஸ் இன்ரநெஷனல் நிறுவனத்தின் வதிவிட பிரதிநிதி எஸ்.ரமணதாஸ் ஆகியோர்கள் அதிதிகளாக கலந்து கொண்டு பொதிகளை வழங்கி வைத்தனர்.



# சர்வதேச தென்னை தினத்தை முன்னிட்டு திருமலையில் தென்னங்கன்றுகள் வழங்கி வைப்பு

**ரவ்பீக் பாயிஸ்**

சர்வதேச தென்னை தினத்தை முன்னிட்டு திருகோணமலை இலுப்பைக்குளம் பிரதேசத்தில் தென்னை மரங்கள் நடும் நிகழ்வு இடம்பெற்றது. குறித்த நிகழ்வில் பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான டீ. உ. டே. ஜயவிக்ரம கலந்து கொண்டதுடன் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்குத் தென்னங்கன்றுகளையும் வழங்கி வைத்தார்.



தொடர்ந்து உரையாற்றிய திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் தமக்கு வழங்கப்பட்டுள்ள தென்னங்கன்றுகளை தங்களுடைய குடியிருப்புப் பிரதேசத்திலோ அல்லது தோட்டத்திலோ சரியான முறையில் பராமரித்து வளர்ப்பதன் மூலம் தங்களுக்குத் தேவையான தேங்காய்களை பெற்றுக்கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படுவதுடன் அவற்றை கடைகளிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் கிடையாது. எனவே வழங்கப்படுகின்ற தென்னங்கன்றுகளை வெறுமனே வீட்டினுடைய ஒதுக்குப்புறங்களில் வைத்திருப்பதை விடுத்து உடனடியாக அவற்றை நட்டி முறையான அடிப்படையில் வளர்க்க வேண்டிய தேவை முக்கியமானதாக அமைவதாகவும் இதன்போது தெரிவித்தார்.

மேலும் திருகோணமலை மாவட்டத்திலிருக்கக் கூடிய ஒவ்வொரு குடும்பங்களுக்கும் தென்னங்கன்றுகளை நடக்கூடிய இடம் காணப்படுகின்றப்பொழுது குறைந்தபட்சம் ஐந்து தென்னங்கன்றுகளை வளர்ப்பதன் மூலம் தங்களுடைய சுய நுகர்வுக்குத் தேவையான தேங்காய்களை அவற்றிலிருந்து நான்கு அல்லது ஐந்து வருடங்களுக்குள் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். அத்துடன் தங்களுக்கு இதன்மூலம் மேலதிக வருமானத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படும். இதன்மூலம் இம் மாவட்டம் தேங்காய் உற்பத்தியில் தன்னிறைவு பெறக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படும் என்று இதன் போது அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

தென்னைப் பயிர்ச் செய்கையினுடைய அதிகாரிகளினால் நாற்றுமேடை தயாரிப்பது மற்றும் தென்னங்கன்றினுடைய பராமரிப்பு முறை தொடர்பான விளக்கங்களும் இதன்போது எடுத்துரை க்கப்பட்டன.

International green forest அமைப்பு இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. இந்நிகழ்வில் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபையினுடைய தவிசாளர் அரசியல் பிரமுகர்கள், அரச நிறுவனங்களின் அதிகாரிகளுட்பட பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உயர்தரப் பரீட்சையில் சிறப்பு சித்தி பெற்ற மாணவர்களை ஆளுனர் பாராட்டினார்



**ஹஸ்பர்[e]**

ஓரிரு நாட்களுக்கு முன்னர் வெளியிடப்பட்ட உயர்தரப் பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் உயிரியல் பிரிவில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்ற மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியைச் சேர்ந்த மாணவன் தமிழ்வண்ணன் துவரகேஷ் மற்றும் செங்கலடியைச் சேர்ந்த மாணவன் லோகிதன் கிஷோபன் ஆகியோருக்கு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் விசேட பாராட்டுக்களை ஏற்பாடு செய்து பணப் பரிசில்களையும் வழங்கினார். பௌதீகவியல் பிரிவில் நாடளாவிய ரீதியில் நான்காம் இடத்தைப் பெற்ற மட்டக்களப்பு மத்திய மகா வித்தியாலய மாணவனையும் பாராட்டினார். இதன்படி வியாழக்கிழமை (01) காலை ஆளுநர் கல்வி கற்கும் பாடசாலைகளுக்குச் சென்று மாகாண சபையின் ஏற்பாட்டின் கீழ் குறித்த மாணவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாவை வழங்க ஏற்பாடு செய்தமை விசேட அம்சமாகும். மேலும், இந்த ஆண்டு அக்கல்லூரிகளில் உயர்தரத் தேர்வில் அதிக சித்திகளை பெற்ற மாணவர்களையும் பாராட்டினார். இந் நிகழ்வில், ஆளுநரின் செயலாளர் எல்.பி. மதநாயக்க, மாகாணக் கல்விப் பணிப்பாளர் என்.பிள்ளைநாயகம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# இலங்கை மக்களும் இணைந்து இந்தியாவுக்கு நன்றி





**(அஷ்ரப் ஏ சமத்)**

இலங்கை அரசாங்கமும் இலங்கை மக்களும் இணைந்து இந்தியாவுக்கு நன்றி எனும் உபகாரத்தினை நேற்று முன்தினம் (31) கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் வைத்து இந்தியா உயர் ஸ்தாணிகா கோபால் பக்லேவை அழைத்து நன்றி விருதை கையளித்தனர் இந் நிகழ்வில் இலங்கையில் மணிதபிமான முறையில் செயல்ஆற்றும் நான்கு இனங்கள் சார்பாகவும் சர்வதேச தொண்டர் அமைப்புக்களின் தலைவர்கள், பிராதான சங்க நாயக்க தேரோர்கள், பேராசிரியர்கள், இந்தியாவுக்கு நன்றி தெரிவித்து உரையாற்றினார்கள். அத்துடன் அவர்களது நன்றிக் கடிதங்களும் இந்திய உயர் ஸ்தாணிகரிடம் கையளிக்கப்பட்டது. இந் நிகழ்வுக்கு வெளிநாட்டு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்றி, மற்றும் காலாநிதி கொஸ்கொட சிறி சுபோதி அநுநாயக்க தேரோ, கலாநிதி எம். விமலசாரத் தேரோ, பேராசிரியர் மலாவா ஹந்தி ஜெகத் ரவீந்திர, செல்வி ஹிமலி பெர்னான்டோ, சர்வதோய அமைப்பின் பதில் தலைவர். டொக்டர் வின்யா ஆரியரத்தின் நவின் குனரத்தின, ஏ.பால்ராஜ், திருமதி நியோமனி வீரசூரிய, திரு மகேந்திர அமரசூரிய, சுலோச்சன சேகர. கே. ஆர். ரவீந்திரன் ஆகியோறும் கடந்த காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார கொவிட் 19 தருனங்களில் அயல் நாடான இந்தியாவே இந்த நாட்டு மக்களுக்கும் அரசுக்கும் உதவியது. அதற்காக இந்நாட்டில் வாழும் சகல சமூகஙகள சார்பாக நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

# ஆயிரக்கணக்கான அடியார்களுடன் நடைபெற்ற காரைதீவு- மண்டூர் திருத்தல பாத யாத்திரை

**( காரைதீவு நிருபர் சகா)**

காரைதீவில் இருந்து மண்டூர் முருகன் ஆலயத்திற்கான திருத்தல பாதயாத்திரை இன்று(3) சனிக்கிழமை அதிகாலை ஆரம்பமாகியது. முருகப்பெருமான் திருவுருவப் படங்கள் தாங்கிய அலங்கரிக்க பட்ட ஏழு உழவு இயந்திரங்கள் முன்னதாக செல்ல அடியார்கள் அரோகரா கோசம் விண்ணைப்பிளக்க பாதயாத்திரை நகர்ந்தது. இன்று(3) சனிக்கிழமை அதிகாலை நான்கு மணியளவில் மாவடி ஸ்ரீ கந்த சுவாமி ஆலயத்தில் இருந்து புறப்பட்ட பாதயாத்திரை ஐந்து மணியளவில் கண்ணகை அம்மன் ஆலயத்தை அடைந்தது. அங்கிருந்து கல்முனை தரவைப் பிள்ளையார் ஆலயம், ஸ்ரீ முருகன் ஆலயத்தை அடைந்து நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு ,கிட்டங்கி, சவளக்கடை ,நாவிதன்வெளி, வேப்பயடி ,தம்பலவத்தை சென்று மண்டூர் ஆலயத்தை சென்றடைந்தது. கடந்த இரண்டு வருடங்களுக்கு பிற்பாடு இடம்பெறும் பாதயாத்திரை என்பதால், சுமார் 3000 அடியார்கள் இந்த பாதயாத்திரையில் கலந்து கொண்டன.

# யானை தாக்கி மீன் வியாபாரி மரணம்




**(எச்.எம்.எம்.பர்ஸான்)**

யானை தாக்கி நபரொருவர் மரணமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிரான் புலிபாய்ந்த கல் பகுதியில் வைத்தே இந்த சம்பவம் இன்று (3) காலை இடம்பெற்றுள்ளது. வாழைச்சேனை – கிண்ணையடி பகுதியைச் சேர்ந்த 49 வயதுடைய பொன்னுத்துரை ஆனந்தன் என்பவரே யானை தாக்கி உயிரிழந்துள்ளதாக தெரிய வந்துள்ளது. ஓட்டமாவடி பகுதியில் இருந்து மீன்களை எடுத்துக் கொண்டு புலிபாய்ந்த கல் பகுதிக்கு விற்பனை செய்யச் சென்ற போதே யானை தாக்கி மரணமடைந்துள்ளார். இவ்வாறு யானை தாக்கி உயிரிழந்த நபரின் உடல் கல்குடா அகீல் அவசர சேவை வண்டியின் மூலம் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# விவசாயிகளின் கோரிக்கைகள் விதைப்புக்கு முன் நிறைவேற்றப்பட வேண்டும்



மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சிறுபோக விவசாயச் செய்கையிலும், அதற்கு முன்னரும் செய்கை பண்ணப்பட்ட வேளாண்மைச் செய்கை, மேட்டு நிலப்பயிர் செய்கைகளில் பல விவசாயிகளுக்கு எதிர்பார்த்திருந்த விளைச்சல் கிடைக்காததனால் பெரும் நட்டத்தை எதிர்நோக்குகின்றனர். இத்தோடு அரசாங்கத்தால் அறிவித்திருந்த விவசாயிகளின் கடன் திட்டத்தை இரத்துச் செய்த விடயத்தில் கூட பாதிப்புக்கள் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். கிருமிநாசினிகள், யூரியா, எரிபொருள், கடன் திட்டம் மற்றும் காட்டு யானைகளினால் ஏற்படுத்தப்படுகின்ற அழிவுகள் போன்ற பிரச்சினைகள் தீர்க்கப்படுமா? தற்சமயம் ஆரம்பிக்கப்பட உள்ள விவசாயச் செய்கையில் பலன் கிடைக்குமா?

விவசாயச் செய்கையை ஆரம்பிப்பதற்கு முன்னரே விவசாயிகளுக்கான தேவைகள் குறிப்பாக, கிருமிநாசினிகள்,யூரியா, எரிபொருள் போன்றவைகள் விவசாயிகளின் கைகளுக்கு கிடைக்க மாட்டாது என்பதனால் விவசாயிகள் அனைவரும் ஒன்றுகூடி அமைப்புக்கள் ரீதியாக முடிவுகளை எடுத்து கடந்த இறுதியாக நடைபெற்ற மாவட்ட விவசாயக் அபிவிருத்திக் கூட்டத்தில் விவசாயிகள் தங்களது கோரிக்கைகளை முன் வைத்து இக் கோரிக்கைகள் அமுல்படுத்தும் அமைச்சுக்கு அறிவிக்குமாறு தங்களது கோரிக்கைகளை முன் வைத்துள்ளனர்.

இவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற விவசாயம் தொடர்பான நலன் விரும்பிகள், சம்மந்தப்பட்ட அமைச்சுக்கள், செயலாளர்கள் அனைவரும் அரசுடன் பேசி வேளாண்மை விதைப்புக்கு முன் விவசாயிகளுக்கான விவசாய உள்ளீடுகள் கிடைக்க வழி வகுக்குமாறு மு.கிழக்கு மாகாணசபை உறுப்பினர், ஈபிஆர்.எல்.எப்–ப.ம, இரா. துரைரெதத்தினம் வேண்டு கோள் விடுத்துள்ளார்

# தம்பலகாமத்தில் மாபெரும் தொழில் சந்தை

திருகோணமலை மாவட்ட தொழில் நிலையத்தினால் தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் இளைஞர் யுவதிகளுக்கான தொழில் சந்தை இடம் பெறவுள்ளது. குறித்த தொழிற் சந்தையானது தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி அவர்களின் தலைமையில் எதிர்வரும் 06.09.2022 ந் திகதி அன்று காலை 9.00 மணிக்கு இடம் பெறவுள்ளது. நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக இளைஞர் யுவதிகள் தொழிலற்ற நிலையில் உள்ளார்கள். இதனை கருத்திற் கொண்டு திருகோணமலை மாவட்டத்தில் காணப்படும் தனியார் துறை வேலை வாய்ப்புக்களுக்கு ஆட்சேர்க்கும் பொருட்டு திருகோணமலை மாவட்டத்தில் செயற்படும் தனியார் தொழிற்சாலைகள் மற்றும் தனியார் தொழில் நிறுவனங்கள் மூலமாக தொழில் வாய்ப்பினை பெற்றுக் கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே இளைஞர் யுவதிகள் இதன் ஊடாக பயனடையலாம் என மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் தெ.புரபானந்தன் தெரிவித்துள்ளார்.

# ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டு வெளியீடு

**(அஷ்ரப் ஏ சமத்)**

2022 பாகிஸ்தான் வெள்ள நிவாரண திட்டத்தினை **(FRP)** இன்று பாகிஸ்தான் அரசாங்கமும் ஐக்கிய நாடுகள் சபையும் இணைந்து இஸ்லாமாபாத் மற்றும் ஜெனிவாவில் ஒரே நேரத்தில் ஆரம்பித்து வைத்தன. பாகிஸ்தானின் பல்வேறு பகுதிகளில் 33 மில்லியனுக்கும் அதிகமான மக்களைப் பாதித்த பேரழிவுகரமான மழை, வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளின் பின்னணியில் பாகிஸ்தான் வெள்ள நிவாரண திட்டம் ஆரம்பிக்கப்படுகிறது. 350 க்கும் மேற்பட்ட குழந்தைகள் உட்பட 1,100 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். 1,600 க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். 287,000 க்கும் மேற்பட்ட வீடுகள் முழுமையாகவும் 662,000 பகுதியளவிலும் சேதமடைந்து உள்ளன. 735,000 க்கும் மேற்பட்ட கால்நடைகள் இறந்துள்ளன. 2 மில்லியன் ஏக்கர் பயிர்கள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன. தகவல் தொடர்பு உள்கட்டமைப்புக்கு வசதிகளும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன.



**US$1**60.3 மில்லியன் பெறுமதியான உயிர்காக்கும் நடவடிக்கைகளான உணவு பாதுகாப்பு, விவசாயம் மற்றும் கால்நடைகளுக்கான உதவிகள், தங்குமிட வசதிகள் மற்றும் உணவு அல்லாத பிற பொருட்கள், ஊட்டச்சத்து திட்டங்கள், ஆரம்ப சுகாதார சேவைகள், பாதுகாப்பு, நீர் மற்றும் சுகாதாரம், பெண்கள் சுகாதாரம் மற்றும் கல்வி ஒத்துழைப்பு, மற்றும் இடம்பெயர்ந்த மக்களுக்கான தங்குமிடம் ஆகிய 5.2 மில்லியன் மக்களின் தேவைகளில் இந்த வெள்ள நிவாரண திட்டம் கவனம் செலுத்துகிறது.

வெள்ள நிவாரண திட்டமானது முதன்மை மனிதாபிமான தேவைகள், முயற்சிகள் மற்றும் ஐ.நா மற்றும் பிற நலன் விரும்பிகளுடன் இணைந்து இந்த சவால்களை கையாள பாகிஸ்தான் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளை விளக்குவதோடு பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், நன்கு ஒருங்கிணைந்த செயல் திட்டத்தையும் கொண்டுள்ளது. உணவு பாதுகாப்பு மற்றும் விவசாயம், சுகாதாரம், ஊட்டச்சத்து, கல்வி, பாதுகாப்பு, தங்குமிடம் மற்றும் உணவு அல்லாத பொருட்கள், தண்ணீர், சுகாதாரம் ஆகிய பல் துறை விடயங்களை வெள்ள நிவாரண திட்டம் கொண்டுள்ளது. மேலும், பாகிஸ்தான் தாராள மனப்பான்மையுடன் 3 மில்லியனுக்கும் அதிகமான ஆப்கானிய அகதிகளுக்கு ஆதரவளித்தது வருகிறது. மேலும் முந்தைய சந்தர்ப்பங்களைப் போலவே, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் குறைந்தபட்சம் 421,000 அகதிகள் இந்த வெள்ள நிவாரண திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இங்கு முக்கிய உரை ஆற்றிய வெளியுறவு அமைச்சர் பிலாவல் பூட்டோ சர்தாரி, "அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு பாகிஸ்தான் தேசம் ஆதரவு அளித்து வருகிறது. மக்கள், சிவில்சமூகம் மற்றும் மனிதாபிமான அமைப்புகள் தாராள மனப்பான்மையுடன் நிவாரணப் பணிகளை நிறைவு செய்ய பெரிய அளவில் உதவி வருகின்றன. மேலும், பிரதமர் வெள்ள நிவாரண நிதி 2022 ஆனது, நாடு பூராகவும் , வெளிநாடுகளில் உள்ள மக்கள் வெள்ள நிவாரணப் பணிகளில் பங்களிக்க வசதியாக நிறுவப்பட்டுள்ளது. ஆனாலும், இந்த திட்டமானது ஒட்டுமொத்த தேவைகளின் ஒரு பகுதியை மட்டுமே நிவர்த்தி செய்யும் . எனவே, பரந்தளவு உதவிகளும் முயற்சிகளும் எதிர்பார்க்கப்படுகிறது" என்று குறிப்பிட்டார். இச் சந்தர்ப்பத்தில் பாகிஸ்தான் மக்களுக்கு சர்வதேச சமூகத்தின் முழு ஆதரவும் ஒற்றுமையும் பாகிஸ்தான் மக்களின் துன்பங்களைத் தணிப்பதற்கும் அவர்களின் வாழ்க்கையையும் சமூகங்களையும் மீண்டும் கட்டியெழுப்ப உதவுவதற்கும் மிகவும் அவசியமான சந்தர்ப்பமாகும்" என்றும் வெளியுறவு அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

ஐ.நா பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் தனது வீடியோ செய்தியில், " முன்னெப்போதுமில்லாத அளவு பாகிஸ்தான் மக்கள் கனமழை மற்றும் வெள்ளத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் . இதற்காக பாகிஸ்தான் அரசு மிகவிரைவாக செயற்பட்டுள்ளது. பாகிஸ்தான் அரசானது உடனடி பண நிவாரணம் உட்பட தேசிய நிதியை வெளியிட்டுமுள்ளது. ஆனால் தேவைகளின் அளவு வெள்ள நீர் போல் உயர்ந்து வருகிறது. எனவே, உலக நாடுகளின் கூட்டு உதவிகள் விரைவாக தேவைப்படுகிறது" என்று குறிப்பிட்டார். பாகிஸ்தான் திட்டமிடல் அமைச்சர் அஹ்சன் இக்பால், "பருவநிலை மாற்றத்தால் பாதிக்கப்படக்கூடிய முதல் பத்து நாடுகளில் பாகிஸ்தானும் உள்ளது. மேலும் இந்த ஆண்டின் தொடக்கத்தில் வெப்ப அலைகள், காட்டுத் தீ, பல பனிப்பாறை ஏரி வெடிப்பு, வெள்ளம் போன்ற கொடூரமான காலநிலை நிகழ்வுகளால் நாம் பாதிக்கப்பட்டோம். இப்போது இந்த பேரழிவு தரும் பருவமழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளோம்." என்று குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் சபையின் குடியுரிமை மற்றும் மனிதாபிமான ஒருங்கிணைப்பாளர் ஜூலியன் ஹார்னிஸ் கருத்துத்தெரிவிக்கையில் "இந்த பாரிய வெள்ள அனர்த்தம் உலகில் காலநிலை மாற்றத்தால் ஏற்படுகிறது. இதற்கான காரணங்கள் சர்வதேசமயப்பட்டது. எனவே, இதற்கான தீர்வு சர்வதேச ஒன்றிணைப்பை வேண்டி நிற்கிறது. அவர் மேலும் கூறுகையில், "பாகிஸ்தான் முழுவதும், அரச ஊழியர்கள், சாதாரண மக்கள் மழையில் நனைந்த வண்ணம் மக்களின் உயிர்களைக் காப்பாற்றுவதையும் , எல்லாவற்றையும் இழந்தவர்களுக்கு தங்களிடம் உள்ள சிறிதளவு பொருளையேனும் கொடுப்பதையும் நான் பார்த்திருக்கிறேன். சர்வதேச சமூகமாகிய நாம் , பாகிஸ்தான் மக்களுடன் இணைந்து நிற்க வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களின் உயிர்களை காப்பாற்றவும் அவர்களுக்கு உதவவும் சர்வதேச சமூகத்திடமிருந்து நமக்குத் தேவைப்படும் குறைந்தபட்ச அளவு இந்த வேண்டுகோள் ஆகும். பாகிஸ்தான் மக்கள் எங்களின் ஆதரவுக்கு தகுதியானவர்கள்" என்று குறிப்பிட்டார்.

தேசிய பேரிடர் முகாமைத்துவ ஆணையத்தின் (**NDMA**) தலைவர் லெப்டினன்ட் ஜெனரல் அக்தர் நவாஸ், தற்போதைய மனிதாபிமான சூழ்நிலை மற்றும் மீட்பு , நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பாகிஸ்தானின் சிநேக பூர்வ நாடுகளினதும் , பாகிஸ்தான் அரசினதும் முயற்சிகள் குறித்து விரிவாக விளக்கமளித்தார். செம்பிறை இயக்கம் மற்றும் செஞ்சிலுவை சங்கங்களின் சர்வதேச கூட்டமைப்பு (**IFRC**) தேசிய சமூக மேம்பாடு மற்றும் செயல்பாட்டு ஒருங்கிணைப்புக்கான துணைச் செயலாளர் திரு. சேவியர் காஸ்டெல்லானோஸ் மொஸ்குவேரா கருத்துத்தெரிவிக்கையில், "இந்த பாரிய வெள்ளத்தில்பாதிக்கப்பட்டஉறவுகளுக்குஉதவ சர்வதேச செஞ்சிலுவை சங்கம் உறுதிபூண்டுள்ளது. பாகிஸ்தான் செம்பிறை இயக்கத்துடன் இணைந்து, 324,000 பேருக்கு உடல்நலம், பாதுகாப்பான குடிநீர், அவசரகால தங்குமிடம் மற்றும் வாழ்வாதாரம் ஆகியவற்றில் உதவி செய்ய ஆரம்ப அவசர வேண்டுகோள் மூலம் நிதி கோருகியுள்ளோம். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமானது, பாகிஸ்தான் அரசு மற்றும் ஐ.நா. அமைப்புகளுடன் இணைந்து பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் தேவையான அடிப்படைத் தேவைகளை உறுதி செய்ய முயற்சி எடுத்து வருகிறது.

ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் திரு. பிலிப்போ கிராண்டி கருத்துத்தெரிவிக்கையில் , "எனது சொந்த நிறுவனம் உட்பட , சர்வதேச சமூகம் இன்று பாகிஸ்தான் மக்களுக்கு உதவ வேண்டும். பாகிஸ்தானுக்கான உலகளாவிய ஆதரவு எங்களுக்கு அவசரமாகத் தேவைப்படுகிறது" என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் இஸ்லாமாபாத் மற்றும் ஜெனிவாவில் உள்ள தூதரகப் அதிகாரிகள் , பாகிஸ்தானில் உள்ள ஐ.நா. காரியாலயங்கள் உயர் மட்ட உறுப்பினர்கள், சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகள், சர்வதேச நிதி நிறுவனங்கள், சிவில் சமூகம் மற்றும் ஊடக நிறுவனங்கள் கலந்து கொண்டனர். இதில் பங்கேற்றோர், விலைமதிப்பற்ற உயிர்கள் இழப்பு மற்றும் உள்கட்டமைப்பு சேதம் ஆகியவற்றிற்கு தமது அனுதாபங்களை வெளிப்படுத்தியதோடு, பாகிஸ்தானின் நிவாரண, மீட்பு, மற்றும் புனரமைப்பு முயற்சிகளுக்கு தொடர்ந்து ஆதரவளிப்பதை உறுதி செய்தனர். பாகிஸ்தானானது, மனிதாபிமான அவசரநிலைகளுக்கு முகம் கொடுப்பதில் அனுபவம் கொண்ட நாடு மட்டுமல்லாது நிலையான வளர்ச்சி இலக்குகளை (**SDGs**) அடைவதில் பெரும் முன்னேற்றமும் கண்ட நாடாகும். எவ்வாறாயினும், தற்போதைய வெள்ளத்தின் அளவு முன்னெப்போதுமில்லாதவாறு மிகவும் கொடூரமானது. பாகிஸ்தானின் 30 ஆண்டு சராசரி மழை வீழ்ச்சியை விட 2.9 மடங்கு மழை பெய்துள்ளது. இது காலநிலை மாற்றத்தினால் ஏற்பட்ட விளைவே ஆகும். சர்வதேச சமூகம் பாகிஸ்தானுடன் ஒன்றிணைந்து தற்போதைய வெள்ளத்தின் நேரடி மற்றும் ஒன்றோடொன்று தொடர்புடைய பாதிப்புகளை நிவர்த்தி செய்வதில் பாகிஸ்தானின் முயற்சிகளுக்கு பங்களிப்பு செய்வது மிகவும் முக்கியமாகும்.

# இந்து மகளீர் கல்லூரி 100 ஆண்டு விழா



**பொன் ஆனந்தம்**

திருகோணமலை ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரியின் நூற்றாண்டினை முன்னிட்டு "நூற்றாண்டு இலச்சினை" கல்லூரியின் அதிபர் திருமதி. லிங்கேஸ்வரி ரவிராஜன் தலைமையில் வெளியிட்டு வைக்கப்பட்டது. திருக்கோணமலை வலயத்தின் வலயக்கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் சிறீதரன் அவர்களால் 02.09.2022 அன்று வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்நிகழ்வை கல்லூரியின் கல்வி சமூகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்நிகழ்வில் வேதாகமமாமணி சோ. இரவிச்சந்திரக்குருக்கள், தமிழரசுக்கட்சி மாவட்ட தலைவர் குகதாசன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்தில் நிகழ்வுகள்





**(எம்.என். எம். அப்ராஸ்,எம்.வை.அமீர்,யூ. கே.காலிதீன் அஸ்லம் மௌலானா)**

நாடு பூராகவும் இன்று 156 வது பொலிஸ் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில் 156 வது பொலிஸ் தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்திலும் இன்று(03)நிகழ்வுகள் இடம்பெற்றன. சாய்ந்தமருது பொலிஸ் நிலையதின் பொறுப்பதிகாரி, பிரதம பொலிஸ் பரிசோதகர் எஸ். எல்.சம்சுதீன் தலைமையில் இடம்பெற்ற இன்நிகழ்வின் ஆரம்பமாக பொலிஸ் சேவையின் போது நாட்டுக்காக உயிர் நீத்த பொலிசார்களுக்காக இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மற்றும் ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்களின் குடும்பங்களுக்கு கௌரவிக்கப்பட்டு உலருனவு பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டது. சாய்ந்தமருது பொலிஸ் நிலைய ஆலோசனை சபையின் ஏற்பாட்டில்இடம்பெற்ற இன் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் முதல் முஸ்லிம் பெண் உயர் நீதிமன்ற நீதிபதி ஓய்வு பெற்ற மைமுனா அஹமட் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

மேலும் இந்நிகழ்வில் கல்முனை கடற்படை நிலைய பொறுப்பதிகாரி அசோக வீரசேகர, லெப்டினல் எம். கே.இர்ஷாட் கான் சாய்ந்தமருது ஜ/ம்மா பெரிய பள்ளிவாசல் பிரதம பேஷ் இமாம் மௌலவி எம்.ஐ.ஆதம்பாவா(ரசாதி)

சாய்ந்தமருது பொலிஸ் பொது மக்கள் பாதுகாப்பு ஆலோசனை குழுவின் தலைவர் முன்னாள் அதிபர் எம்.எம் இஸ்மாயில் , செயலாளர் ஆசிரிய ஆலோசகர் எம்.எம்.ரபீக் உட்பட உறுப்பினர்கள், சாய்ந்தமருது அல்ஃஜலால் வித்தியாலய அதிபர் எம்.ஐ.எம்.சைபுதீன், கல்முனை மாநகர சபை உறுப்பினர் சட்டத்தரணி ஆயிசா சித்திக்கா,பொது மக்கள் பொலிசார் ஆகியோர் கலந்து கொண்டனர். அத்துடன் இன்று முதல் 3 ஆந் திகதி முதல் 10 ஆம் திகதி வரை நாடு பூராகவும் பொலிஸ் வாரம் மேற்கொள்ளப்படவுள்ள நிலையில் சாய்ந்தமருது பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் எஸ்.எல்.சம்சுதீன் தெரிவித்தார். இதன் அங்கமாக இன்று முதல் 3 ஆந் திகதி முதல் 10 ஆம் திகதி வரை இன்று பிற்பகல் (03) அக்பர் ஜ/ம்ஆப் பள்ளிவாசலில் துஆப் பிரார்த்தனை இடம் பெறவுள்ளதுடன் தொடராக வாரத்தில் கல்முனை ஸாஹிறா தேசிய பாடசாலை மைதானத்தில் சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டி (பொலிஸ் அணிக்கும் – ஸாஹிறாக் கல்லூரி அணி),கல்முனை ஸாஹிறா தேசிய பாடசாலை மாணவர்களுக்கான விழிப்பூட்டல் கருத்தரங்கு ,சாய்ந்தமருது தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மத்திய நிலையத்தில் இளைஞர்கள், யுவதிகள்,பொதுமக்கள் ஆகியோருக்கான விழிப்பூட்டல் கருத்தரங்கு, சாய்ந்தமருது ஆயுள்வேத வைத்தியசாலையில் வைத்திய சேவை முகாம்,சாய்ந்தமருது கடற்கரை வீதி முழுவதும் கழகங்கள்,இளைஞர்கள்,பொதுமக்கள் பங்குபற்றுதலுடன் சிரமதானம், சாய்ந்தமருது பிரதேச பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட 17 கிராமசேவகர் பிரிவுகளைச் சேர்ந்த தேவையுடைய குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கல்,சாய்ந்தமருது பொலிஸ் நிலையம் மற்றும் மையவாடிகளை அண்மித்த வீதியோரங்களில் மரநடுகை,சாய்ந்தமருது ஆ.ளு.காரியப்பர் வித்தியாலயத்தில் சாய்ந்தமருது பிரதேச செயலக, பொலிஸ் நடமாடும் சேவையும் சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையின் வைத்திய சேவை முகாமும் என்பன எற்பாடு செய்யப்பட்டுள்ளதாக சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரசோதகர் எஸ். எல் சம்சுதீன் மேலும் தெரிவித்தார்.

# விவசாய உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு

குச்சவெளி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கிராமங்களில் வசிக்கும் வறிய, பின்தங்கிய குடும்பங்களின் வாழ்வாதாரத்தினை நிலைபேறு கொண்டவையாக மேம்படுத்தும் நோக்குடன், விவசாய, மீன்பிடி மற்றும் சுயதொழில்களை மேற்கொள்வதற்கு அவசியமான பல இலட்ச ரூபாய்கள் பெறுமதியுடைய பலவகைப்பட்ட உபகரணங்கள் மற்றும் கருவிகளை முஸ்லிம் எய்ட் பயனாளிகளுக்கு வழங்கி வைக்கும் அண்மையில் நிலாவெளி அல் பத்தாஹ் மகாவித்தியாலத்தில் நடைபெற்றது.

முஸ்லிம் எய்ட் நிறுவனம் இந் நிகழ்ச்சித்திட்டத்தினை கடந்த இரண்டு வருடங்களாக குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவு கிராமங்களில் நடைமுறைப்படுத்தி வருகின்றது.இந் நிறுவனத்தின் இரண்டாம் கட்ட திட்டத்தின் ஒரு பகுதியாக இவ்வாழ்வாதார உதவிகள் அமைகின்றன. இக்கையளிப்பு நிகழ்வில் திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே. எஸ். அருள்ராஜ், பிரதம அதிதியாகவும் குச்சவெளி பிரதேச செயலாளர் கே.குணநாதன், திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சிறிதரன், முஸ்லிம் எய்ட் சிறிலங்கா தேசிய பணிப்பாளர் ஏ.சீ. பைசர்கான் மற்றும் விவசாயத் திணைக்கள பிரதி பணிப்பாளர் எம். பரமேஸ்வரன் ஆகியோர் விசேட அதீதிகளாகவும் பங்கேற்று நிகழ்வினைச் சிறப்பித்தனர்.

மேலும், பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு பன்முகத் தன்மையுடைய விவசாயச் செய்கையினை ஊக்குவிக்கும் நோக்குடன், குச்சவெளிப் பிரதேசத்திலுள்ள சில பாடசாலைகளில் விவசாய முயற்சிகளை ஊக்குவிக்கும் திட்டத்திற்கான விவசாய உபகரணங்கள் மற்றும் நீண்டகாலப் பயிர்கள் வினியோகிக்கப்பட்டன. பாடசாலை சமூகமும் முஸ்லிம் எய்ட் ஊழியர்களும் இணைந்து இவ் வினியோக நிகழ்வினை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். கொவிட் நெருக்கடிகள் மற்றும் கடந்த சில மாதங்களாக முழு நாட்டையும் பாதித்து வருகின்ற மோசமான பொருளாதார நெருக்கடிகள் விலையேற்றங்கள் போன்ற சவால்களைக் கடந்து மேற்படி வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டங்கள் சமூக பங்குபற்றுதல் மற்றும் அரசாங்க நிறுவனங்களின் ஒத்துழைப்பு வழிகாட்டலுடன் வெற்றிகரமான முன்னோக்கிக் கொண்டு செல்லப்படுகின்றது.

# கால் புதையும் மண்ணில்

# சிற்கள் புதைந்து செல்லும்

# தேரோட்டம்

## 2022.09.11

## காண வாரீர்!

கொக்கட்டிச்சோலை
ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர்
ஆலயம்



"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206